# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 02, 2022 Weekly E-paper ● July 02, 2022


# அது திமிர்... இது காட்டுமிராண்டித்தனம்!

சுப. வீரபாண்டியன்




## மகராஷ்டிரமும் தமிழ்நாடும்!

எழில்.இளங்கோவன்

## வேண்டாம்! வன்முறை வேண்டாம்!

தலையங்கம்

## தமிழ்த் தேசியத் தலைவரா, இவர்!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 02, 2022

Weekly E-paper ● July 02, 2022


# அது திமிர்... இது காட்டுமிராண்டித்தனம்!

**சுப. வீரபாண்டியன்**

பாஜகவின் பேச்சாளரான நுபுர் சர்மா போன்றவர்கள் பற்றவைத்த தீ இன்னும் அணையவில்லை. நாடெங்கும் வேறு வேறு வடிவங்களில் கொழுந்துவிட்டு எரிகிறது!

கடந்த மே 26 அன்று, ஒரு தொலைக்காட்சி விவாதத்தின்போது, நபிகள் நாயகம் குறித்து, நுபுர் ஷர்மா வெளியிட்ட கருத்து, இந்தியாவில் பெரும் எதிர்ப்புக்கு ஆளானதுடன், உலக நாடுகள் முன் இந்தியாவிற்கு ஒரு தலைகுனிவையும் ஏற்படுத்தியது. வளைகுடா நாடுகளில் பணியாற்றும் 89 லட்சம் இந்தியர்களுக்கும் பெரும் சிக்கலை ஏற்படுத்தியது.

இவ்வளவும் செய்துவிட்டு இப்போது தனக்குப் பாதுகாப்பில்லை என்கிறார் நுபுர் ஷர்மா!உங்களுக்குப் பாதுகாப்பில்லையா அல்லது உங்களால் நாட்டுக்குப் பாதுகாப்பு இல்லையா என்று மிகச் சரியாக உச்சநீதிமன்றத்தில் நீதிபதி சூர்யகாந்த் கேட்டுள்ளார்.

உச்சநீதிமன்றம் இன்னொரு மிக முக்கியமான கேள்வியையும் கேட்டுள்ளது. நுபுர் ஷர்மா கொடுத்த புகாரின் அடிப்படையில் ஒருவரைக் கைது செய்துள்ள காவல்துறை, இன்றுவரையில்








நுபூர் ஷர்மாவை ஏன் கைது செய்யவில்லை என்பதே அந்தக் கேள்வி.

தொலைக்காட்சி நெறியாளர் கேட்ட கேள்விதான் நுபுர் ஷர்மாவை அப்படிப் பதில் சொல்ல வைத்தது, எனவே அந்த நெறியாளர்தான் குற்றவாளி என்று நுபுர் ஷர்மாவின் 'புத்திசாலி' வழக்கறிஞர் நீதிமன்றத்தில் சொல்லியுள்ளார். அப்படியானால் அந்த நெறியாளர் மீது ஏன் வழக்கு பதியவில்லை என்று நீதிபதிகள் கேட்டுள்ளனர். விடையில்லை.

இப்படி நாடே நுபுர் ஷர்மாவைக் கண்டித்துக் கொண்டிருக்கும் வேளையில்தான், ராஜஸ்தான் உதய்பூர் மாவட்டத்தில் கன்னையா லால் என்னும் ஒரு தையல் கலைஞர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். நுபுர் ஷர்மாவின் பதிவை அவர் மீள்பதிவு செய்தார் என்பதற்காக, அவரை இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த இரண்டு தீவிரவாதிகள் பட்டப்பகலில் வெட்டிக் கொலை செய்துள்ளனர். அது திமிர் என்றால், இது காட்டுமிராண்டித்தனம்.

இந்தக் கொலை, மறைமுகமாகப் பாஜகவிற்கே உதவி செய்கிறது. கன்னையாவைக் கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ரியாஸ் அத்தர், முகமது கவுஸ் ஆகிய இருவரும், பாஜக சிறுபான்மை மோர்ச்சா பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒரு தகவல் இப்போது ஊடகங்களில் காசிகிறது. இது உண்மையா என்று தெரியவில்லை. ஆனால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள யாரை வேண்டுமானாலும் சங்கிகள் பலி கொடுப்பார்கள் என்பது உலகறிந்த உண்மை! ●

# மகாராஷ்டிரமும் தமிழ்நாடும்!

எழில்.இளங்கோவன்

உத்தவ் தாக்கரே – ஏக்நாத் ஷிண்டே, அவர்களையும், அவர்களின் ஆட்சி அரசியல் குழப்பங்களையும் மகாராஷ்டிரத்தில் பார்த்தோம். எடப்பாடி பழனிச்சாமி – ஓ.பன்னீர்செல்வம், இவர்களையும், இவர்களின் கட்சி அரசியல் குழப்பங்களையும் தமிழகத்தில் பார்க்கிறோம்.

இந்தக் குழப்பங்களுக்கு என்ன காரணம், யார் காரணம் என்பது இலைமறை காயாக, திரைக்குப் பின்னால் இருப்பதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.



ஏக்நாத் ஷிண்டே



பன்முகத் தன்மைகள் கொண்டுள்ள மக்கள் வாழும் இந்திய ஒன்றியத்தை 'ஏக' இந்தியா, 'ராம' ராஜ்யம், 'இந்து நாடு' என்ற ஒற்றைத் தலைமையின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ் கொள்கையை, அந்தக் குறிக்கோளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் பா.ஜ.க.வின் தில்லு முல்லுகளில் இப்போது மகாராஷ்டிர ஆட்சியரசியலும், தமிழக எதிர்க்கட்சி அரசியலும் சிக்கிக் கொண்டிருக்கின்றன.

மகாராஷ்டிர சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 288. இதில் ஆட்சி அமைக்க 145 உறுப்பினர்கள் வேண்டும். 2019 ஆம் ஆண்டு தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக பா.ஜ.க. 105 இடங்களைப் பெற்றது. சிவசேனாவுடன் கூட்டு வைத்து தேவேந்திர பட்னாவிஸை முதல்வராக்கி ஆட்சியைக் கைப்பற்ற முயன்றது பா.ஜ.க.

ஆனால் வெறும் 56 உறுப்பினர்களைக் கொண்ட சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே முதல்வர் பதவி தமக்கு வேண்டும் என்ற உறுதியோடு இருந்தார். பா.ஜ.க விட்டுத் தரவில்லை.

ஒரு கட்டத்தில் 54 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட காங்கிரஸ், 44 உறுப்பினர்கள் கொண்ட தேசியவாதக் காங்கிரஸ் இரண்டுடன் "மகா விகாஸ் அகாடி " என்ற பெயரில் கூட்டணி அமைத்து, மகாராஷ்டிரத்தின் முதல்வர் ஆனார் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே.

ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகள் அவரின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த ஏக்நாத் ஷிண்டேவுக்கு திடீரென்று ஒரு ஞானோதயம் ஏற்பட்டது, உத்தவ் தாக்கரே இந்துத்துவா வழியில் ஆட்சி செய்யவில்லை என்று. முதல்வருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார்.

பா.ஜ.க. வுடன் கூட்டணி வைத்து ஆட்சி அமைக்க வேண்டும் சிவசேனா, இதுதான் ஏக்நாத் ஷிண்டேவின் ஞானோதயத்தின் விளைவாக எழுந்த கோரிக்கை. இது குறித்துப் பேசி முடிவெடுக்கலாம் என்று உத்தவ் தாக்கரே சொல்லியும் கேட்கவில்லை ஷிண்டே.

தனக்கு ஆதரவான 40 சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட்டிக் கொண்டு "பா.ஜ.க. ஆளும்" அஸ்ஸாம் மாநிலத்தின் கௌகாத்திக்குச் சென்று சொகுசு வசதிகளுடன் தங்க வைத்தார் ஷிண்டே.

இப்படிப்பட்ட சூழலில் ஒரு புறம் உத்தவ் தாக்கரேவைக் கவிழ்க்க முயற்சி செய்தார் பா.ஜ.க வின் மாநிலத் தலைவர். மத்திய அமைச்சர் ராவ்சாகேப் தன்வே இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் உத்தவ் தாக்கரே ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று கூறியிருந்தார். சொன்னது நடந்தது. நினைத்தது நடந்தது. சிவசேனா ஆட்சியைக் கவிழ்த்தது பா.ஜ.க. உத்தவ் தாக்கரே பதவி விலகினார். மகாராஷ்டிரத்தில் பா.ஜ.க தலைமையில் ஆட்சி, முதல்வரானார் ஏக்நாத் ஷிண்டே. வென்றது சூழ்ச்சி.

தமிழ்நாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடிய பெரிய கட்சிகளில் அ.தி.மு.கவும் ஒன்று.

"அ.தி.மு.க., உட்கட்சி மோதலை உருவாக்கியவர்களே பா.ஜ.க தலைவர்கள்தான். ஒற்றைத் தலைமையாக இருந்தாலும் சரி, இரட்டை அல்லது மூன்று தலைமையாக இருந்தாலும் சரி, தமிழகத்தில் அ.தி.மு.க., இனி, பா.ஜ.க.வின் கைப்பாவையாகத்தான் இருக்கும். ஜெயலலிதா மறைவுக்குப் பின், அ.தி.மு.க., உட்கட்சி விவகாரத்தில், அமித் ஷாவின் தலையீடு இருந்து வருகிறது " என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர்களுள் ஒருவரான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் பேசியது இங்கே நினைவுகூரத்தக்கது.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவையொட்டி கலைவாணர் அரங்கிற்கு வந்தார் வெங்கைய நாயுடு. அதற்குப் பின்னர்தான் அ.தி.மு.கவில் குழப்பங்கள், பிளவுகள், அணிகள், கூவத்தூர், தர்மயுத்தங்கள், இரட்டைத் தலைமை என்று நிலை தடுமாறத் தொடங்கி, இப்பொழுது ஒற்றைத் தலைமை என்று வானகரம் பொதுக்குழுவில் வந்து நிற்கிறது அக்கட்சி.

அப்பொதுக்குழு கூடவிருந்த சில நாள்களுக்கு முன்னர் அ.தி.மு.கவில் பா.ஜ.க தலையீடு இல்லை என்று அண்ணாமலை அடித்துச் சென்னார். பொதுக்குழு முடிந்த ஜூன் 23 அன்று எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவையில், எந்த அதிகாரமும் இல்லாத 'துணை முதல்வர்' பதவியை, பிரதமர் நரேந்திர மோடி சொன்னதால்தான் ஏற்றுக் கொண்டேன் என்று பா.ஜ.க வின் தலையீட்டைச் செய்தியாளர்களிடம் வெளிப்படுத்திய ஓ.பன்னீர்செல்வம், அன்றே பிரதமரைப் பார்க்க டில்லிக்குப் புறப்பட்டார்.

அ.திமு.கவில் அமைதி நிலவுவதை பா.ஜ.க ரசிக்கவில்லை. அங்கே நிலவும் ஈ.பி.எஸ் மற்றும் ஓ.பி.எஸ் அணிகளின் குழப்பங்களுக்குப் பின்னணியில் பா.ஜ.க இருப்பது தெரிகிறது.

முன்னாள் அமைச்சர் பொன்னையன், "தமிழக அரசியலில் அ.தி.மு.கவின் இடத்திற்கு வர பா.ஜ.க. முயல்கிறது" என்று ஒரு திரியைக் கொளுத்திப் போட்டார்.

2024 பொதுத் தேர்தலில் 22 சீட்டுகளைப் பா.ஜ.க அ.தி.மு.க விடம் கேட்டுப் பெற இருக்கிறதாம். அதனை ஈ.பி.எஸ் விரும்பவில்லையாம். 2024 தேர்தலும், பொன்னையன் பேச்சும் அவரைக் கலங்கடித்துள்ளதாகக் கட்சியினர் கருதுகின்றனராம்.

ஓ.பி.எஸ், கட்சித் தொண்டர்களின் ஆதரவை இழந்த நிலையில், பெரும்பான்மைத் தலைவர்கள் இ.பி.எஸ் அணியில் இருக்கும் நிலையில், அ.தி.மு.க என்ற துருப்புச்சீட்டின் கயிறை வைத்துக் கொண்டு அக்கட்சியை அசைத்துக் கொண்டு இருக்கிறது, பா.ஜ.க. அ.தி.மு.க எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம் இது.

இந்திய ஒன்றியத்தில் ஆக்டோபஸ் போல பரவலாகத் தன் கால்களைப் பரப்பி வைத்துக் கொண்டுள்ள நிலையில், ஒற்றை ஆட்சியைக் கொண்டுவர, பாசிசச் சித்தாந்தம் பா.ஜ.க.வின் செயல்களிலும் இருக்கும் என்பதற்கு இன்றைய மகாராஷ்டிரம், தமிழ்நாடு ஆகியவை சான்றாக அமைகின்றன.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## வேண்டாம்! வன்முறை வேண்டாம் !

வன்முறை யாரிடம் இருந்து வந்தாலும், எந்த வடிவத்தில் வந்தாலும் அதை ஏற்க முடியாது.

வெறுப்பரசியலும் வன்முறை உருவாகக் காரணமாக அமைகிறது. சில நேரங்களில் அங்கே உயிரிழப்பும் ஏற்படுகிறது. மனிதநேயம் உடைய யாரும் இதை ஏற்க மாட்டார்கள்.

அண்மையில் நுபுர் சர்மாவின் வெறுப்பரசியல் பேச்சால் நாடே கொதித்துப் போனது. அவர் கைது செய்யப்படவில்லை. ஆனால் வழக்குகள் போடப்பட்டு உள்ளன.

நுபுர் சர்மாவுக்கு ஆதரவாக இராஜஸ்தான் மாநிலம், உதய்பூரின் தான்மண்டி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இருந்து கன்ஹையா லால்தேலி என்பவர் சமூக வலைதளத்தில் ஒரு செய்தியைப் போட்டிருந்தார்.

அவர் ஒரு துணி தைக்கும் தொழிலாளி. வழக்கம் போல அன்றும் அவர் தன் கடையைத் திறந்து தையல் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது துணி தைக்க வேண்டும் என்று ரியாஸ் அக்தாரி, கவுஸ் முகமது ஆகிய இருவர் வந்துள்ளனர். திடீரென்று ஒருவர் தையல் கடைக்காரரைப் பிடித்துக் கொள்ள, மற்றவர் தான் வைத்திருந்த ஆயுதத்தால் அவரின் தலையைக் கொய்து விட்டார்.

இதில் மிகப்பெரும் கொடுமை என்னவென்றால், அக்கொலைச் சம்பவத்தை அவர்களே படமெடுத்து சமூக தளத்தில் வெளியிட்டு இருக்கிறார்கள். ஈரநெஞ்சம் உள்ள யாரும் இப்படிச் செய்ய மாட்டார்கள்.

கைதிகள் யாரொருவருக்கும் மரணதண்டனை கூட கொடுக்கக் கூடாது என்று உலக அளவில் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இங்கே ஆணவத்தால், சாதியால், மதத்தால், தனிப்பட்ட பகையால், பொறுப்பற்ற பேச்சுகளால் வன்முறைகள் நடைபெறுகின்றன.

புத்தர், அம்பேத்கர், காந்தியார், பெரியார் போன்ற தலைவர்கள் வன்முறையை ஆதரித்தவர்கள் அல்லர்.

வன்முறையற்ற மனிதர்களால் சமூகம் பண்படும். வன்முறையற்ற சமூகங்களால் நாடு பண்படும்.

உதய்பூர் வன்முறையைக் கண்டிப்பதோடு, வன்முறைக்கு விடை கொடுத்து, மானுடத்தை உயர்த்திப் பிடிப்போம் !

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408





26-06-2026 அன்று திண்டுக்கல் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக நடைபெற்ற மூன்று நூல்கள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. பேராசிரியர் சுப.வீரபாண்டியன் எழுதிய "கருப்பும் காவியும் " என்ற நூலுக்கு வேடசந்தூர் கி.இரவியும், உதயகுமார் - வெற்றிச்செல்வன் எழுதிய "ஏன் பெரியார் மதங்களின் விரோதி" என்ற நூலுக்கு காசு. நாகராசனும், பேரா.சுப. வீரபாண்டியன் - வழக்கறிஞர் அருள்மொழி உரைகளான "குறளும் கீதையும்" என்ற நூலுக்கு வழக்கறிஞர் வைரமுத்து ஆகியோர் அறிமுகவுரை ஆற்றினார்கள்.




27-06-2022 அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் நடந்த தலைவர் கலைஞர் அவர்களின் 99 ஆம் வயது நினைவேந்தல் கூட்டம்



27-06-2022 அன்று கன்னியாகுமரியில் திராவிட நட்புக் கழகத் தோழர்களுடன் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன், துணைப் பொதுச் செயலாளர் ஆ.சிங்காரயர் ஆகியோர் கலந்துரையாடினார்கள்.



# தமிழ்த் தேசியத் தலைவரா, இவர்!

**வெற்றிச்செல்வன்**

சென்னை மாகாணத்தில் வழங்கப்பட்டு வந்த வகுப்புவாரி இட ஒதுக்கீட்டால் தனக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்றும், வகுப்புவாரி இட ஒதுக்கீடானது அரசியல் அமைப்புச்சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளுக்கு (உறுப்புகள் 15 மற்றும் 29(2)) எதிரானது என்றும் செண்பகம் துரைராஜன் என்ற பார்ப்பனப் பெண் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் (அவர் மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கவே இல்லை என்பதும், விண்ணப்பித்ததாகப் பொய்ப் பிரமாணப் பத்திரம் (False Affidavit) தாக்கல் செய்திருந்தார் என்பதும் வேறு விஷயம்).



இந்த வழக்கில், வகுப்புவாரி இட ஒதுக்கீடு செல்லாது என்று உயர்நீதிமன்றம் 27.07.1950 அன்று தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் பார்ப்பனர்களின் சார்பாக வாதாடியவர் வேறு யாருமில்லை, அரசியலமைப்பு வரைவுக் குழுவில் இருந்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்.

ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்தவர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்பாக ஏற்படுத்தப்பட்ட இட ஒதுக்கீட்டு உரிமை, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் மறுக்கப்பட்டதைக் கண்டு கொதிப்புற்ற தமிழகம், தந்தை பெரியாரின் தலைமையில் கிளர்ந்தெழுந்தது. தமிழகம் முழுவதும் போராட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தி மக்களை அணிதிரட்டினார் பெரியார். 'விடுதலை' நாளேட்டில் தொடர்ந்து இது தொடர்பாகக் கட்டுரைகள், தலையங்கங்கள் எழுதினார். திருச்சியில் 03.12.1950 அன்று வகுப்புரிமை மீட்பு மாநாடு கூட்டினார். இத்தனை போராட்டங்களுக்குப் பிறகு, காங்கிரஸ் அரசு அரசியல் சட்டத்தைத் திருத்த ஒப்புக் கொண்டது. முதல் சட்டத் திருத்தமாக வகுப்புரிமைக்கு உத்தரவாதம் கொடுக்கும் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. திருத்தத்தின்போது நடைபெற்ற விவாதங்களின்போது அப்போதைய பிரதமர் நேரு 29.05.1951 அன்று நாடாளுமன்றத்தில் பேசியதாவது:

"The House knows very well and there is no need for trying to hush it up, that this particular matter in this particular shape arose because of certain happenings in Madras. Because the Government of the State of Madras issued a G. O. by making certain reservations etc., for certain classes or certain communities rather for all communities and the High Court of Madras said that the G.O. was not in order, was against the spirit or letter of the Constitution etc.," (சென்னை மாகாணத்தில் நடந்த சில நிகழ்வுகளின் காரணமாக இப்பிரச்சனை எழுந்துள்ளது என்பதை இந்த அவை நன்கு அறியும். இட ஒதுக்கீட்டிற்காகச் சென்னை மாகாண அரசு கொண்டு வந்த அரசாணையைச் சென்னை உயர்நீதிமன்றம் செல்லாததாக்கியுள்ளது என்பதே அது) என்கிறார் நேரு. முதல் சட்டத் திருத்தத்திற்கான காரணம் வகுப்புவாரி அரசாணையை எதிர்த்துச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கும், அதில் கொடுக்கப்பட்ட தீர்ப்பும், அதன் பின்னர் நடைபெற்ற போராட்டங்களும். இதுதான் முதல் சட்டத் திருத்தத்திற்கான பின்னணி.

ஆனால், தமிழகத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதிய ம. பொ. சிவஞானம் இந்த நிகழ்வைப் பற்றிக் குறிப்பிடும்போது எழுதியுள்ள வரிகள் பின்வருமாறு:

"நாடு சுதந்திரம் பெற்ற பின், 1950-இல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை சென்னை மாகாண உயர்நீதிமன்றத்தில் அடிபட்டுவிட்டது. அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சி அதற்குப் புத்துயிரளிக்க முயன்றது. அதற்காக, அரசியல் சட்டத்தையே திருத்தியது பிராமணரான நேருஜியின் தலைமையைப் பெற்றிருந்த மத்திய அரசு. இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஓராண்டுக்குள்ளாக அதில்

செய்யப்பட்ட முதல் திருத்தம் சென்னை மாகாணத்திற்கே உரிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றியதுதான். ஆம்; ஜஸ்டிஸ் கட்சி கோரியதும், சென்னை மாகாண சுயேட்சை அமைச்சரவை செய்ததும் 'கம்யூனல் ஜி.ஓ' என்ற அளவிலேதான்! ஆனால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேதான் வகுப்புரிமை நீதி இந்திய அரசியல் சட்டத்தில் ஏறியது. இதனால், இந்தியா முழுவதிலுமே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நடைமுறைக்கு வரவும் வழி பிறந்தது" (விடுதலைப் போரில் தமிழகம், பக்கம் 572)

முதல் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கான வரலாற்றுப் பின்னணியையோ, அதற்கான போராட்டங்களையோ ஒரு வரியில்கூடத் தெரிவிக்க மனமில்லாதது மட்டுமல்ல, வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு உரிமைக்குக் காங்கிரஸ் கட்சி புத்துயிரளிக்க முயன்றதாகவும், அதற்காக அரசியல் சட்டத்தையே திருத்தியதாகவும், அதற்குக் காரணம் பிராமணரான நேரு என்று சொல்லியிருப்பதும் எவ்வளவு பெரிய வரலாற்றுத் திரிபு. இந்த ம.பொ.சி.தான், இப்போது கிளம்பியிருக்கும் போலித் தமிழ்த் தேசியவாதிகளால் "தமிழ்த் தேசியத் தலைவர்களுள்" ஒருவராகக் கொண்டாடப்படுகிறார். போராட்ட வரலாற்றைத் தெரிவிக்காததற்கான நியாயமான காரணங்கள் ம.பொ.சி-க்கு இருக்கின்றன. ஏனென்றால் இட ஒதுக்கீட்டு உரிமைக்காகத் தமிழகமே போராடிக் கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில்தான் (1950-51) தமிழகம் முழுக்கத் திராவிட எதிர்ப்பு மாநாடுகளை அவர் நடத்திக் கொண்டிருந்தார்.

1982-இல் வெளிவந்த மேற்கண்ட நூலின் வரிகள் (1995-இல் ம.பொ.சி. மறைந்தார்) ம.பொ.சி. அவர்களின் இந்திய தேசியச் சார்பு மனப்பான்மையையும், பார்ப்பனியப் பாசத்தையுமே காட்டுகிறது. சுதந்திரத் தமிழரசு அமைப்பதை நோக்கமாகக் கொண்டு தமிழரசுக் கழகம் அமைத்த 'ம.பொ.சி.-யின் தமிழகம்' பின்னாளில் இந்திய தேசியத்திற்கு உட்பட்ட தமிழ்த் தேசியமாகச் சுருங்கி, அதன்பின்னர் மத வழித் தேசியமாகிப் போனது. பேராசிரியர் சுபவீ அவர்களின் வார்த்தையில் கூறுவதானால், 'பார்ப்பனிய இந்துப் பண்பாட்டை ஏற்றுக் கொண்ட இந்திய தேசியத்தின் ஒரு பகுதியாகத் தமிழகம்' என்பது தமிழரசுக் கழகத்தின் கோட்பாடானது. அதுமட்டுமன்று, திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியவர் இறுதியில் தி.மு.க, அ.தி.மு.க. ஆட்சிகளில் மாறி மாறிப் பதவி அனுபவித்தது வரலாற்று முரண்.

ஆனால், சட்டமன்றத்திற்கோ, நாடாளுமன்றத்திற்கோ செல்லாத தந்தை பெரியாரால் இந்தியாவில் வசிக்கும் அனைத்து பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் வகுப்புவாரி உரிமை வழங்கப்பட்டது. பெரியார் மக்கள் மனங்களில் நிறைந்து நிற்கிறார். ம.பொ.சி. யோ சிலைகளில் மட்டும் வாழ்கிறார். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian